C.C. 619 of 2012 Previous Date : 02.07.2019

PW7

மோகன்ராஜ் த/பெ.பட்டிகவுண்டர்

Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 01.07.2026.

(This evidence is recorded through Video Conference by using Terms Application. The witness is identified by police. The Witness is directed to download this deposition and to get signed by the witness shall be returned to this court through post and the scanned and signed deposition shall be sent to the Court's E-mail ID)

A1 died. A2 absent. absent. 317 Cr.P.C. Petition filed and allowed. A3 present.

2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. அ.சா.1 சுப்பிரமணி எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் மதியம் 12.00 மணிக்கு கொடுத்துள்ளார். சம்பவம் எத்தனை மணிக்கு நடந்துள்ளது என்றால் காலை 9.45 மணிக்கு நடந்துள்ளது. சின்னகலையம்புத்தூரில் இருந்து பழனி தாலுகா காவல் நிலையம் வருவதற்கு எத்தனை கி.மீ. என்றால் 4 கி.மீ. இருக்கும். 9.45 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நிலையில் ஏன் காலதாமதமானது என்றால் மறியல் நடைபெற்றதால் அவரால் வரமுடியவில்லை. மறியல் நடைபெற்ற இடத்திற்கு நான் சென்றேனா என்றால் போலிஸ் பார்ட்டி அங்கு இருந்தார்கள். அவ்வாறு மறியலில் ஈடுபட்ட நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்தார்கள், குற்ற எண் ஞாபகமில்லை. மறியலுக்காக வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. புகாரை புகார்தாரர் கொடுத்தாரா அல்லது நான் சொல்ல சொல்ல அவர் எழுதி கொடுத்தாரா என்றால் புகார்தாரரே அவராகவே எழுதி கொடுத்தார், புகார்தாரர் ஒரு அதிகாரி. புகார் மனுவில் ஓட்டுச்சீட்டின் வரிசை எண்களையோ, ஓட்டுசீட்டில் உள்ள நபர்களின் பெயர் விபரங்களையோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, 55 முதல் 150 வரை உள்ள ஒரு கட்டு என்று சொல்லியுள்ளார். இந்த தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் போட்டி போட்டார்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. அந்த Societyக்கு எத்தனை Directorகள் தேர்வு செய்யப்பட்டார்கள் என்று விசாரித்தேனா என்றால் ஞாபகமில்லை. புகார்தாரர் சுப்பிரமணி அவரிடம் இருந்து வாக்குசீட்டை பிடிங்கி சென்று மூன்று நபர்கள் அவருடைய மர்ம உறுப்பை பிடித்து கொண்டார்கள் என்று

சொல்லியுள்ளதால் அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேனா என்றால் அடித்து பிடிங்கி சென்றார்கள் என்று சொல்லியுள்ளார், மர்ம உறுப்பு என்று சொல்லவில்லை, மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டாரா என்பது தற்போது ஞாபகமில்லை.

2. புகார் மனுவில் மர்ம உறுப்பை பிடித்து கொண்டு சீட்டுகளை பிடிங்கி சென்றார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. எதிரி கருணாநிதிதான் சீட்டை பிடிங்கி சென்றார் என்றால் கருணாநிதியும், மற்ற இரண்டு எதிரிகளும் ஆக மூன்று எதிரிகளும் பிடிங்கி சென்றுள்ளார்கள். போலிங் பாய்ண்டுக்குள் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் தொடக்க வேளாண்மை அதிகாரிகள் மற்றும் ஓட்டு போடும் நபர்கள் இருந்துள்ளார்கள். எல்லா வேட்பாளர்களுக்கும் ஒரு ஒரு Agent போலிங் ரூமுக்குள் இருந்திருப்பார்கள் என்றால் தொடக்க வேளாண்மை கூட்டுறவு தேர்தலில் அதிகாரிகள் மட்டும் தான் இருப்பார்கள், Agent கிடையாது. அந்த தேர்தலில் போலிங் ரூமில் வேட்பாளர்களின் Agentகளும் இருந்தார்கள் என்றால் சரியல்ல. ஓட்டு போடும் அறைக்குள் எத்தனை பேரை அனுமதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் கொடுத்தார்கள் என்றால் தேர்தல் அலுவலர் தான் அதை முடிவு செய்வார், எனக்கு தற்போது ஞாபகமில்லை. போலிங் ரூமில் தேர்தல் அலுவலர்கள், Agentகள், ஓட்டுபோடும் நபர்கள் என 30 பேர் ஒரே நேரத்தில் அங்கிருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. தேர்தல் நேரத்தில் எத்தனை காவலர்கள் அங்கு பணியில் இருந்தார்கள் என்றால் ஒரு உதவி ஆய்வாளரும், இரண்டு போலிசாரும் இருந்தார்கள். அந்த உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு போலிசாரை இந்த வழக்கு விசாரணையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அந்த உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு போலிசாரும் Outside Duty ஆக தேர்தல் நடக்கும் அறைக்கு வெளியே தான் இருப்பார்கள். புகாரில் அ.சா.1ஐ மர்ம பகுதியில் பிடித்தபோது பெண் காவலர் தான் வந்து விலக்கிவிட்டார் என்று சொல்லியுள்ள நிலையில் அந்த பெண் காவலரை விசாரிக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. புகார்தாரர், சம்பவ சாட்சி எல்லோரும் அரசு அதிகாரிகள் என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகள் வழக்கமாக காவல் நிலையத்தில் வந்து கையொப்பம் செய்யும் நபர்கள் என்றால் சரியல்ல. அ.சா.1ஐ நான் விசாரணை செய்தபோது புகார் கொடுத்த அ.சா.1 மற்றும் அ.சா.2, அ.சா.3, அ.சா.4

நான்குபேரும் நான் விசாரித்தபோது விசாரணை வாக்குமூலத்தில் மர்ம உறுப்பை பிடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். 1 முதல் 55 வரையிலான வாக்குசீட்டுகளின் வரிசை எண்ணை இறுதியறிக்கையில் குறிப்பிடபடவில்லை என்றாலும் அந்த சீட்டுக்களை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல, சீட்டு எண் குறிப்பிடப்பட்டதா என்பது ஞாபகமில்லை.

3. புகார் மனுவில் அ.சா.1 வாக்குசீட்டை பிடிங்கி கொண்டு மூன்று எதிரிகளும் வாகனத்தில் தப்பி சென்று விட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த தப்பி சென்றதாக சொல்லும் வாகனத்தை கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எதிரிகள் வாக்குசீட்டை பிடுங்கவில்லை என்றாலும், இருசக்கர வாகனத்தில் தப்பி செல்லவில்லை என்றாலும் எதிரிகள் மீது பொய்யாக குற்றிஇறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. ஓட்டு பதியாத வாக்குசீட்டுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் ஓட்டு பதியாத வாக்குசீட்டுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்பதால் நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எத்தனை வாக்குசீட்டுகளை பிடிங்கி சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எண்.55 முதல் 150 வரை உள்ள ஒரு கட்டு. இந்த மூன்று எதிரிகளும் வேட்பாளர்களே இல்லை என்றால் அது சரியாக ஞாபகமில்லை. எதிரிகள் ஓட்டுபோட வரிசையில் வந்து கொண்டிருந்தார்கள் என்றாலும் அ.சா.3, அ.சா.4 எதிரிகளுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த நபர்களிடம் அ.தி.மு.க அணி வேட்பாளர்களுக்கு ஓட்டு போடச்சொன்னார்கள் என்ற விபரத்தை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் ஞாபகமில்லை. அ.சா.3 கிருஷ்ணசாமி, அ.சா.4 முனியாண்டி ஆகியோர் அ.தி.மு.க காலத்தில் நியமிக்கப்பட்ட நபர்கள் என்பதால் அவர்கள் அ.தி.மு.க தரப்பினருக்கு போலிங் ரூமுக்குள் இருந்து ஓட்டு கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.3, 4 அவ்வாறு ஓட்டு கேட்டபோது எதிரிகள் தட்டி கேட்டார்கள் என்றாலும் அதனால் 100 பேருக்கு உள்ளே தள்ளுமுள்ளு ஏற்பட்டு மேற்படி சீட்டுக்கள் காணாமல் போனது என்றாலும் சரியல்ல. தாலுகா காவல் நிலையத்தில் இந்த வழக்கில் சொல்லியுள்ள நாள் அன்று பணியில் இருந்தபோது எத்தனை கூட்டுறவு சங்கத்தில் தேர்தல் பிரச்சனை ஏற்பட்டு வழக்கு

தெரிவிக்கப்பட்டது என்றால் இந்த ஒரு வழக்கு தான் வந்தது. அ.சா.1 தனது சாட்சியத்தில் இந்த வழக்கில் சொல்லியுள்ள நாளில் பாப்பம்பட்டி, நெய்காரப்பட்டி, பெரியகலையம்புத்தூர் அகிய இடங்களில் தேர்தல் நடக்காமல் நின்றுவிட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. தேர்தல் நடத்துவதற்கு முன் தினம் இரவு ஆளும் கட்சி தரப்புக்கு எதிராக வேட்பு மனு தாக்கல் செய்த ஊர்களில் சங்க தேர்தலை நடத்த விடாமல் தடுக்க வேண்டும் என்று வாய்மொழி உத்தரவு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.2 தனது நீதிமன்ற விசாரணையில் எதிரிகளை தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.2 தனது சாட்சியத்தில் பிரச்சனை நடந்த நேரத்தில் 3 நபர்கள் அறைக்குள் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் அறைக்குள் இருந்திருப்பார்கள். அ.சா.2 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் யார் ஓட்டு சீட்டை பிடிங்கினார் என்று உறுதியாக சொல்ல முடியாது என்று சொல்லியுள்ளார் என்றால் விசாரணை வாக்குமூலத்தில் எதிரிகள் மூன்று பேர் என்று சொல்லியுள்ளார், நீதிமன்றத்தில் அவர் சொன்ன விபரம் எனக்கு தெரியாது. அ.சா.2 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் இந்த வழக்கில் இந்த எதிரிகள் தான் உண்மையான பிரச்சனை செய்த நபர்கள் என்று தனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் விசாரணை வாக்குமூலத்தில் எதிரிகள் மூன்று பேர் என்று சொல்லியுள்ளார், நீதிமன்றத்தில் அவர் சொன்ன விபரம் எனக்கு தெரியாது. அ.சா.3, அ.சா.4 ஆகியோர் 08.07.2007ம் தேதி தான் நான் விசாரணை செய்தேன் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் நான் 07.07.2007ம் தேதி தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அ.சா.3 சம்பவம் நடந்த இடத்தில் நான் இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் எனது விசாரணை வாக்குமூலத்தில் இருந்தேன் என்று சொல்லியுள்ளார். அ.சா.3 சம்பவயிடத்தில் இல்லை என்பதால் யார் ஓட்டு சீட்டை கிழித்தார் என்று தனக்கு தெரியாது என்று எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 எனது விசாரணை வாக்குமூலத்தில் தோற்கும் படியாக இருந்தால் தேர்தலை நிறுத்தும்படி வாய்மொழி உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் தொடர்பு குறித்து கேட்டபோது ஞாபகமில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் விசாரணை வாக்குமூலத்தில் தொடர்பு உள்ளது என்று சொல்லியுள்ளார். அ.சா.4

முனியாண்டி எதிரிகள் உள்ளூரை சேர்ந்தவர்கள் என்பதால் பொய்சாட்சி சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது, என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார். அ.சா.5 அழகுராஜா நான் கையொப்பம் செய்த பேப்பர் பார்வை மகஜரில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றாலும் சம்பவம் பற்றி தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றாலும் சரியல்ல, என்னிடம் வாக்குமூலத்தில் அப்படி சொல்லவில்லை.

5. அ.சா.6 செல்வம் எதற்கு கையொப்பம் செய்தேன் என்று சொல்லியுள்ளார் என்றாலும் சம்பவயிடத்தில் தான் இல்லை என்று சொல்லியுள்ளார் என்றாலும் சரியல்ல, என்னிடம் வாக்குமூலத்தில் அப்படி சொல்லவில்லை. அந்த இடத்தில் கூடியிருந்த 100 பேர்களில் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சம்பவ சாட்சிகளை இறுதியறிக்கையில் சேர்த்துள்ளேன். இறுதியறிக்கையில் அரசு அலுவலரை தவிர பொது ஜன நபர்களை சம்பவ சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றாலும் பார்வை மகஜர் சாட்சிகளாக இரண்டு பொது நபர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் நான் சொல்வதுபோல் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும் அ.சா.3, அ.சா.4 ஆகியோர் ஓட்டு போட வந்த நபர்களிடம் தவறாக அறிவுறுத்திய காரணத்தினால் இரண்டு தரப்புக்கும் வாக்கு செலுத்தும் இடத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றாலும் எதிரிகள் வாக்குசீட்டை பிடுங்கவில்லை என்றாலும் சரியல்ல. அரசு அலுவலர் கொடுத்த வழக்கு என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.01 18:03:11 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.